திரு. பி.எஸ். உலகரட்சகன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சிறு தொழில்கள் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 42-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 44,42,40,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.52,15,000/- ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் செவ்வாய்க்கிழமை (16-04-2002) காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

111. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும், [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)